#

சின்ன விஷயம் தான் என்றாலும் கூட ....................

# அகமாற்றம் தேவை - 9

புகலிடம் தேடிப் பற்பல நாடுகளில் தஞ்சம் புகந்துவிட்ட நம்மைப் போன்றவர்களுக்குத் தாய்நாடு போகின்ற வாய்ப்பு ஏற்படுகின்ற சமயங்களில் ஏற்படும் மன உணர்ச்சிகள் இருக்கின்றதே! அவற்றை வார்ததைகளால் எடுத்துச் சொல்ல முடியாது. பல்வேறு காரணங்களில், பல் வேறு பிரிவுகளாக மனம் பறக்கும். இந்த உணர்ச்சிப் புயல்களெல்லாம் ஓரளவு அடங்கிய பின்பு யாருக்கு, என்ன வாங்கிப் போவது? என்ற கேள்வி மிகப் பெரிதாக நம் முன் தோன்றும். பல தரப்பட்ட மக்கள் அவரவர்களின் அறிவிற்கேற்ப, தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் ஏற்ப, மிகப் பெரும்பானவர்கள் ஆடம்பரத்திற்காக, மிகச் சிலர் அற்பத்தனமாக என்று எதை எதையோ வாங்கிப் பெட்டிகளை நிரப்புவார்கள். அதற்குமுன் தெரிந்தவர்களிடமெல்லாம் அவர்களின் அனுபவத்தை கேட்பார்கள். “இங்கிருந்து என்ன வாங்கிப் போகலாம்? நீங்க என்ன என்ன வாங்கிப் போனிங்க? எது எங்கே குறைந்த விலைக்குக் கிடைக்கும்” என்றெல்லாம் கேள்விகள் நீளும். அவர்களும் தங்கள் அனுபவங்களையெல்லாம் தெரிந்தவரை விதவிதமாகச் சொல்லிக் கேட்பவர் மண்டையை மேலும் குழப்பிவிட்டு விடுவார்கள். ஏற்கனவே ஊருக்குப் போகப் போகிறோம் என்ற போதையில், இந்த அனுபவக் குப்பைகளும் சேர்ந்து கண்களுக்கு முன் மின்மினிப் பூச்சிகள் பறக்கும்.

அடுத்த சில நாட்களில் இவர்கள், எந்தவிதக் குறிக்கோளுமின்றித் துணையுடனோ அல்லது துணையில்லாமலோ மணிக்கணக்கில் ( Big Malls & shopping complex) போன்ற பேரங்காடிகள் ஒன்று விடாமல் சுற்று சுற்றென்று சுற்றுவார்கள். அதுவும் பனிக்காலமென்றால் கேட்கவே வேண்டாம். நாம் ஒரு எடையென்றால், நமது உடை ஓர் எடையாக மாறி நம்மை அழுத்தும். அங்காடிகளோ இந்த மக்களை எப்படியாவது திருத்தியே ஆக வேண்டும் என்று, தள்ளு வண்டிகளைக் கடைப் பகுதியை விட்டு அப்பால் நாலு அடி கூட நகர்த்திச் செல்ல முடியாத விதத்தில் தடுப்புகளைக் கட்டி வைத்து விட்டார்கள். அதையும் தாண்டி மூலைக்கு மூலை, வீதிக்கு வீதி ஆங்காங்கே இப்படிப்பட்ட தள்ளு வண்டிகள் கிடப்பதையும், (தலையில் அடித்துக்கொண்டு) அவற்றைப் பொறுக்கிக்கொண்டு போவதற்கே உரிய அங்காடிகளின் பணியாளர்கள் ‘வேனு’ டன் திரிவதும் வேறு விஷயம். இப்படித் தேடித் தேடி தூக்க முடியாமல் பொதிகளைத் தூக்கி சுமந்து, வாங்கி வந்தப் பொருள்கள், நடுத்தர குடும்பப் பட்ஜெட்டிற்குள் அடங்கி வரவேண்டுமென்றால் அவற்றில் பெரும்பாலானவை டாலர் கடைகளிலும் (Dollarama) மலிவு விற்பனைக் கடைகளிலும் (Good Will) போன்ற பழைய பொருட்கள் விற்பனை நிலையங்களிலும் தான் வாங்கப் பட்டவையாக இருக்கும். எல்லாவற்றிற்கும் இடம் ஒதுக்கி பக்குவமாக அடுக்கிக் குறிப்பிடப்பட்டுள்ள எடைக்கு மேல் சுமார் 7 கிலோவாவது அதிகமாய் இருக்கும்படியாக, உயிர் போகும் நிலையிலுள்ள அந்தப் பெட்டிகள் தயாராகும். விமானப் பணியாளர்கள் தூக்கித் தூக்கிப் போடுவதில் இவற்றின் உயிர் நிச்சயம் பிரிந்து விடும் என்ற சந்தேகத்தில், பெட்டிக்கு மேல் வலுவான கயிறுகளால் பிள்ளைகள் தங்கள் வலிமையையும் சேர்த்துச் சுற்றிக் கட்டித் தருவார்கள். நம் மனதில் ஆசைகள் எவ்வளவு அடைத்துக்கொண்டு கிடக்கின்றன என்பதை நமது பெட்டிகளே காட்டிக் கொடுத்து விடும். அடுத்து இந்த இரண்டு பெட்டிகள் போதாதென்று, கையில் எடுத்துச் செல்லும் பெட்டியையும் அல்லது தோல் பையையும் கூடுமானவரைப் பெரிதாகத்தான் தேர்ந்தெடுத்துக்கொள்வோம் அதிலும் திணிக்க முடிந்தவரைத் திணித்து மீதி இடத்தை விமானத்தில் தருபவற்றை வாங்கிப் போட்டுக்கொள்வதற்காக விட்டு

#
வைப்போம். நம்மவர்கள் தான் இப்படி என்றில்லை. எல்லா இன மக்களும் இப்படித் தான் இருக்கின்றார்கள். சொல்லப்போனால், இன்னும் மோசமாக. இப்படி எல்லா ஏற்பாடுகளுடன் விமான நிலையத்தை அடைந்து அங்குள்ள விமானப் பணியாளர்களிடம் தந்து, அவர்கள் அவற்றை ஏற்று அனுப்பும் வரை திக் திக்தான்.

வாழ்க்கையில் பல சமயங்களில் நாம் நினைப்பது நடப்பதில்லை. ஆனால் இங்கு, எது நடக்கக்கூடாது என்று நாம் நினைக்கிறோமோ அது கட்டாயம் நடந்துவிடும். விமான நிலையப் பணியாளர், எடை கூடுதலான பெட்டி என்று ஏற்க மறுத்து விடுவார். பிற நாட்டுப் பயணிகள் ஏளனமாகப் பாத்துக்கொண்டிருக்க, ஏகப்பட்ட மறுப்புகளைத் தெரிவித்தபின், அவர்கள் பார்ப்பதை நாம் பார்க்காதது போல் எவ்விழத சலனமும் இல்லாமல், படபடப்புடன் பெட்டிகளைப் பிரித்து, அவற்றில் உள்ள கூடுதலான பொருள்களில் எதை எடுப்பது என்பது தெரியாமல், சில சமயம் நமக்குத் தேவை என்று எடுத்த வைத்தவற்றைக் கூட அவசரத்தில் எடுத்து வேறு பைகளில் போட்டு, அதற்குக் கூட ஓடிப்போய் ஏதாவது ஒரு கடையில் இரண்டு மடங்கு அதிக விலை கொடுத்து பெரிய பையாக வாங்கி வரச் செய்து, நம்மைச் சுற்றி ஒரே ரகளை தான். (பெரியவர்கள் சும்மாவா சொல்லியிருக்கிறார்கள! ‘சுண்டக்காய் கால் பணம்’ சுமை கூலி முக்கால் பணம்’ என்று) அதற்குள் ஓவராக அள்ளிப் போட்டிருக்கும் உடைகளுக்குள் குளிரையும் மீறி வியர்க்கும் முகம், களை இழந்து, வாடிவிடும். வழியனுப்ப வந்தவர்களுக்கும் சங்கடம் தான். ஒரு வழியாகச் சமாளித்து, ஒப்பேற்றிப் பெட்டிக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒரு பெரு மூச்சுடன் அங்கிருந்து நகர்ந்து, எல்லோருக்குமாக ஒரு உயிரற்ற புன்னகையை உதிர்த்துப் பரிதாபமாகக் கையசைத்து விடை பெற்று, விமான இருப்பிடம் நோக்கிச் செல்வோம் இது தேவையா?

தொடர்ந்து முடிந்து, ஊரையும் வீட்டையும் அடைந்தாயிற்று. நம் வருகை தெரிந்து உறவினர் வருகை அதிகரிக்கும். அவரவர்களுக்கென்று நாம் வாங்கி வந்தப் பொருட்களைப் பிரித்து எடுத்துப் கொடுக்கும்போது அடுத்த உணர்ச்சிப் பெருக்கு, நம் நிலையை விட உயர்ந்த நிலையாக இருக்கும் மன நிலையில், நாம் தரும் பொருள்களை அவர்கள் பெறுவதும், அவற்றை எடைபோடுவது போல மதிப்பிடுவதும், அந்தக் கணத்தில் தான் நாம் வாங்கிச் சென்ற பொருளின் உண்மையான மதிப்பு, அவர்களது பார்வையாக நம் மனதில் தோன்றும். அந்த உணர்வினால் நம் மனம் கூசிக்குறுகும். வார்த்தைகள அங்கு செயற்கையாகப் பரிமாறப்படும். இதெல்லாம் தான் இங்கேயே கிடைக்கின்றதே! என்ற சொல்லைக் கேட்கின்றபோது இயலாமை உள்ளுக்குள் கோபமாகச் சுருண்டு எழும். நமது அலைச்சல்கள், காலநிலைக் கோளாறுகள், உதவியற்ற நிலை, தேர்ந்தெடுக்கத் தெரியாத தன்மை எல்லாவற்றிற்கும் மேலாக விமானப் போக்குவரத்து போட்டு வைத்திருக்கும் தடைகள், நமக்கு ஆகியிருக்கும் செலவுகள் எல்லாமே அந்தக் கணத்தில் மனதில் வந்து போகும். விளைவு, சக்தி எழுப்பு, அதன் வெளிப்பாடு, உற்சாகம் வடிந்துவிடும். மாறாக ஒரு வெறுப்பு உருவாகும். அங்கிருப்பவர்களுக்கோ இவர்கள் கட்டாயம் வாங்கி வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு. நமக்கோ பொருளாதாரத் தட்டுப்பாடு. திருப்தியிழந்த ஒரு சூழ்நிலைதான் பயணத்தின் பயனாக ஆகிவிடும். இப்படிப்பட்ட சாதாரண நிலையை நமது அக மாற்றத்தால் நாம் வெல்ல வேண்டும். ஊருக்குப் புறப்படும்போதே வீணான ஆசைக் கற்பனைகளில் ஈடுபடாத மன நிலையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அங்கு நமக்கு என்ன தேவையோ, நாம் அங்கு செய்ய வேணடிய செயல்களுக்கு என்னென்ன தேவையோ, அவற்றையெல்லாம் சரியாக எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். மிக நிச்சயமாக பயன்படும் என்று நினைக்கின்ற பொருள்களை வாங்கிச் சேகரித்து எடுத்துச் சென்று தரலாம். இதன் மூலம் மேற்குறித்த அத்தனை பிரச்னைகளுமே இல்லாமற் போய்விடும். அவர்கள் சொல்ல நினைத்த

#
வார்தகைகளை நாமே சொல்லி விடலாம். எல்லாமே இங்கு கிடைக்கின்றனவே! அதனால் உங்கள் விருப்பம் அறியாமல் வாங்கி சுமந்து வருவதை விட இங்கேயே வாங்கிக் கொடுத்து விடலாம் என்று வந்து விட்டேன்! என்று அவரவர் தேவைக்கேற்பப் பணத்தைக் கொடுத்து அவர்களையே ஏதாவது வாங்கிக் கொள்ளும்படி சொல்லிவிடலாம். இது ஒரு சின்ன விஷயம் தான். ஆனால் மனம் ஏற்று இதைச் செய்தால், எவ்வளவு நிம்மதி கிடைக்கும்' நேரமும், டென்'னும் குறையும்! என்பது செய்து பார்த்தால் தான் விளங்கும்.

இதனைத் தொடர்ந்து மற்றொரு முக்கிய விஷயம் என்னவென்றால், இங்குள்ள குடும்பத்தின் நிலைமை, குறிப்பாக வீட்டுப் பொறுப்புக்களை நிர்வகிக்கும் குடும்பத்தலைவி ஊருக்குப் போகிறார்கள் என்றால் அந்த வீட்டின் தலைவனும், வளர்ந்த பிள்ளைகளும் அடைகின்ற பிரச்னைகள், ஏராளம். எதையுமே செய்யத் தெரியாத நிலையிலேயே இதுவரை வாழ்ந்துகொண்டிருக்கும் இவர்கள் இப்போது தான் விழிப்பார்கள். காசு இருக்கிறது, நாங்கள் நன்றாகச் செலவழிப்போம்! என்று அவர்கள் எண்ணிக்கொண்டாலும் தாய்மார்களின் அஞ்ஞானம் சும்மா இருக்க விடாது. ஊர் திரும்ப மூன்று மாதமாகும் என்றாலும் அந்த மூன்று மாதத்திற்கும் ஆவது போல் கடைகளில் சுற்றித் திரிந்தது போதாதென்று, மூச்சைப் பிடித்துக்கொண்டு அப்போது தான் தனக்குத் தெரிந்த உணவு வகைகளையெல்லாம் செய்து, குளிர் சாதனப் பெட்டியின் இண்டு, இடுக்குளில் கூட விடாமல் எல்லாம் அடுக்குவார்கள். வீட்டில் இருப்பவர்களின் சுவை, விருப்பம் பற்றிய அக்கறையில்லை. ஒரு பெண்மணி ஒரு முறை என்னிடம் பேசும்போது சொன்னார். "ஐம்பது தோசைகளைச் சுட்டு வடிவான அவற்றை அடுக்கிப் பாதுகாப்பாக freezer-ல வைத்து விட்டுச் சென்றேன். பசிக்கிறபோதெல்லாம் வெளியில் எடுத்து வைத்துச் சிறிது நேரம் கழித்து சாப்பிடுங்கள்! என்று சொல்லியிருந்தேன். ஒரு வாரம் கழித்து தான் அதை எடுத்துப் பார்த்தவர்கள், கட்டை போல விறைத்துப் போய்விட்டது என்று அப்படியே தூக்கிக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டார்களாம்!" என்று. தோசை மட்டுமல்ல, இதே போல் பல ஐயிட்டங்கள், பல இடங்களில், பல்வேறு விதங்களில் எத்தனை உழைப்பு, எவ்வளவு கால இழப்பு! பொருள் நஷ்டம்! மன பாதிப்பு! யோசித்துப் பாருங்கள்! சுற்றிக் கடைகள்' தேவையான எல்லாமே நல்ல விதமாகக் கிடைக்கின்றன. அம்மா இல்லாமல் எல்லாம் எப்படி இருக்கிறது என்று அவர்களும் தான் பார்க்கட்டுமே! எப்பொழுதும் சமையலறை நிறைந்தும், குளியலறை படு சுத்தமாகவும், புழங்கும் அறைகள் எல்லாம் திருத்தமாகவும் எப்படி இருந்தன என்பதை அவர்களும் பார்த்து அறியட்டுமே! ஏன் எல்லாவற்றிற்கும் சேர்ந்து நாமே கவலைப் பட்டுக்கொண்டு, இழுத்துப் போட்டுக்கொண்டு செய்ய வேண்டும்! இப்படி இதைச் சொல்லிக்கொண்டே போகலாம்.. இந்த சிந்தனையை அடிப்படையாக வைத்துக்கொண்டே அவரவர் மேற்கொண்டு தொடர்ந்து அவரவர் தன்மைக்கேற்ப சிந்தித்துக் கொள்ளுங்கள். சக்தி சொல்வதன் உட்பொருள் அப்போது விளங்கும். திடிரென்று ஒரு நாள் சொல்லாமல், கொள்ளாமல் எல்லாவற்றையும் விட்டுவிட்டு போகின்ற நிலை வரும். அப்போது கலங்கக்கூடாது. பட்டென்று புறப்பட்டு விட வேண்டும். சின்ன விஷயம் தான்! என்றாலும் அக மாற்றும் தேவைதானே!